திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"உள் துறை - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் மானியக் கோரிக்கை எண் 22-ன் கீழ் வருவாய் கணக்கில் ரூ.64,70,05,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-4-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

******

3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

68. தஞ்சாவூர் விற்பனைக் குழுவின் அறிவிக்கையிடப்பட்ட பகுதியிலிருந்து சில அறிவிக்கப்பட்ட பகுதிகளை நீக்கம் செய்வது குறித்தும், சில வகையான வேளாண் விளைபொருள்களை செயல் நோக்கத்திற்காக நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் அறிவிக்கப்பட்ட பகுதிகளாக அறிவிப்பது குறித்தும், 4-1-2003 முதல் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் அங்காடிக் குழுக்கள் அமைக்கப்படுவது குறித்தும் வேளாண்மைத் துறையின் 3-1-2003-ஆம் நாளிட்ட 4-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1987ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 52(4) (சி) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

2003 ஏப்ரல் 9]

69. 1983-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 20-1-2003-ஆம் நாளிட்ட 38-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

142. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2003-2004) (தமிழ், ஆங்கிலம்)

143. நெடுஞ்சாலைகள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2003-2004) (தமிழ்)

144. உள் துறை - சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2003-2004) (தமிழ்)

145. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட புதிய அறிவிப்புகள். (2003-2004) (தமிழ்)

146. பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள். (2003-2004) (தமிழ்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS